வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

தேதி: 09.10.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

டிஜிட்டல் புரட்சியினால், **தொழில்நுட்ப ரீதியில் அனைவரையும் உள்ளடக்கிய சமூகமாக** இந்தியா மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், இன்று புதுடெல்லியில், **புகையிலை இல்லா இளைஞர்கள்** இயக்கத்தின் 3ஆம் கட்டப் பணிகளை தொடக்கி வைத்தார்.

**புகையில்லா இளைஞர்கள்** இயக்கத்தின் கீழ், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

இந்தியாவின் **தொழில் முனைவுச் சூழலில்**, ஆண்-பெண் சமத்துவம் பெரிய அளவில் மேம்பட்டுள்ளதாக, மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.

---

மோடி-ஸ்டார்மர் 1 (18)

ஜனநாயகம், சுதந்திரம், மற்றும் சட்டத்தின் ஆட்சியில் நம்பிக்கையுள்ள கூட்டாளி நாடுகளான இந்தியாவும், இங்கிலாந்தும், உலக அளவிலான பொருளாதார வளர்ச்சி, மற்றும், ஸ்திரத் தன்மையில் மிகுந்த

உறுதிப்பாடு கொண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று மும்பையில், இங்கிலாந்து பிரதமர் திரு. கியர் ஸ்டார்மர்-உடன் இணைந்து, செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்கும் இடையிலான, விரிவான, பொருளாதார, மற்றும், வர்த்தக உடன்பாட்டினால், இருநாடுகளைச் சேர்ந்த தொழில் துறையினர் மற்றும், நுகர்வோர் பயன்பெறுவார்கள் என்றார். இதுவரை இல்லாத பெரிய அளவில், இங்கிலாந்து வர்த்தகக் குழுவினர், தற்போது இந்தியா வந்து இருப்பதை பிரதமர் சுட்டிக் காட்டி, இந்தியா-இங்கிலாந்து கூட்டாண்மை உறவுகளில் ஏற்பட்டுள்ள புதிய உத்வேகத்திற்கு இதுவே சான்றாகும் என்றார். இங்கிலாந்தில் உள்ள 18 லட்சம் இந்தியர்கள், இருநாடுகளுக்கும் இடையே வாழும் பாலமாகவே செயல்பட்டு வருவதாக, பிரதமர் கூறினார். 9 இங்கிலாந்து பல்கலைக் கழகங்கள், இந்தியாவில், விரைவில் புதிய வளாகம் தொடக்க இருப்பது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார். இங்கிலாந்தின் தொழிற் துறை அனுபவமும், இந்திய திறமைகளும் இணைவதால், அனைவருக்கும்

மோடி-ஸ்டார்மர் 2 (8)

பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இங்கிலாந்து பிரதமர் திரு. கியர் ஸ்டார்மர், இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், எதிர்கால நோக்குடன் கூடிய கூட்டாண்மை ஒன்றை, இருநாடுகளும் கட்டமைத்து வருவதாக கூறினார். 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக மேம்படும் இலக்கை எட்டும் பாதையில், இந்தியா சரியாகவே பயணித்து வருவதாகவும், இப்பயணத்தில், கூட்டாளியாக

தன்னை இணைத்துக் கொள்வதே, இங்கிலாந்தின் விருப்பம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*ஃபின்டெக்* (13)

தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, இங்கிலாந்து பிரதமர் திரு. கியர் ஸ்டார்மர் ஆகியோர், மும்பையில், உலக ஃபின்டெக் திருவிழாவில் கலந்து கொண்டனர். தொழில்நுட்ப ரீதியில் அனைவரையும் உள்ளடக்கிய சமூகமாக இந்தியா மேம்பட்டு உள்ளதாகவும், உலக அளவில், அனைவருக்குமான தொழில்நுட்பம், மற்றும், புதுமை படைப்புகளுக்கான தரத்தை நிர்ணயிக்கும் நாடாகவே இந்தியா திகழ்வதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இந்தியாவின் யுபிஐ வசதி மூலம், மாதம் 20 பில்லியன் எண்ணிக்கையில், பணப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப் படுவதாக அவர் தெரிவித்தார். இந்தியா-இங்கிலாந்து வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், இருநாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்று இங்கிலாந்து பிரதமர் திரு. ஸ்டார்மர் கூறினார். முன்னதாக இருதலைவர்களும், பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து, விரிவான பேச்சு வார்த்தை நடத்தினர். பிரதிநிதிகள் நிலையிலும் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

---------------------------

*அனுப்பிரியா-புகையிலை* (15)

மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், இன்று புதுடெல்லியில், புகையிலை இல்லா இளைஞர்கள் இயக்கத்தின் 3ஆம் கட்டப் பணிகளை தொடக்கி வைத்தார். தேசிய

அளவிலான இந்த 60 நாள் இயக்கத்தின் போது, புகையிலை பழக்கத்திற்கு ஆளாவதை தவிர்ப்பது குறித்து, இளைஞர்கள், மற்றும், குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், புகையிலை பழக்கத்தில் இருந்து விடுபட விரும்புவோருக்கு தேவையான உதவிகளை வழங்கவும், பள்ளி-கல்லூரிகள், மற்றும், உயர் கல்வி நிறுவனங்களில், சுகாதாரம், மற்றும் உடல்நலம் பற்றிய வலுவான கலாச்சாரம் ஒன்றை உருவாக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படும். நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள், புகையிலை பழக்கத்திற்கு ஆளாகி இருப்பதால், இளைஞர்களை புகையிலை பழக்கத்தில் இருந்து பாதுகாத்து, புகையிலை இல்லாத இந்தியா ஒன்றை உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு புகையிலை மறுப்பு உறுதி மொழியும் செய்து வைக்கப்பட்டது.

---------------------------

*புதுச்சேரி புகையிலை (16)*

புகையிலை இல்லா இளைஞர்கள் இயக்கத்தின் கீழ், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, கொடியசைத்து தொடக்கி வைத்தார். தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டமும், மாநில புகையிலைக் கட்டுப்பாட்டு மையம், மற்றும், அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இப்பேரணியில், 300க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டு, புகையிலையின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு

ஏற்படுத்தினர். இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரியில் தொடங்கிய இப்பேரணி, நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று, மீண்டும் மருத்துவக் கல்லூரியில் முடிவடைந்தது. அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. ரமேஷ், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். 60 நாள் புகையிலை இல்லா இளைஞர்கள் இயக்கத்தின் கீழ், புதுச்சேரியில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் குறித்து, புகையிலை கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் வெங்கடேஷ் எமது செய்தியாளரிடம் பேசுகையில்…..

**(வாய்ஸ்-வெங்கடேஷ்)**

---------------------------

தொழில் முனைவு 1 (15)

கடந்த 10 ஆண்டுகளில், இந்தியாவின் தொழில் முனைவுச் சூழலில், ஆண்-பெண் சமத்துவம் பெரிய அளவில் மேம்பட்டு, 2ஆம் நிலை, மற்றும், 3ஆம் நிலை நகரங்களில் பதிவு செய்யப்படும் கம்பெனிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து இருப்பதாக, மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில், இண்டியா மொபைல் காங்கிரஸ் மாநாட்டின் ஒருபகுதியாக இன்று நடைபெற்ற, தொழில் முனைவோர் மாநாட்டில் அவர் பேசுகையில், பெரும்பாலும் சேவை நாடாக கருதப்பட்ட இந்தியா, தற்போது பெருமளவில் மாற்றம் அடைந்து, உள்நாட்டிலும், உலக

அளவிலும், ஆழமாக கால் பதித்து இருப்பதாக தெரிவித்தார். 15 ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவில் ஒருசில ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் மட்டுமே இருந்த நிலையில், தற்போது, ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் எண்ணிக்கை, 180 ஆயிரத்தை தாண்டி அதிகரித்து வருவதாகவும், இதில் சுமார் 73ஆயிரம் நிறுவனங்கள், பெண்களால் நடத்தப் படுபவை என்றும் அவர் கூறினார்.

---------------------------

*ஜிஎஸ்டி-ஏபி 1 (5)*

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிடிஸ்டி சீர்திருத்தங்களால் ஆந்திர பிரதேசத்தில் பொருளாதாரம் எப்படி எல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு........

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி-ஏபி 2 (19)*

<u>(வாய்ஸ்)</u>

<u>புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், ஆந்திர மாநிலத்தை பொறுத்தவரை, விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், தொழில் துறையினர், மற்றும், சிறு வணிகர்களுக்கு, மிகுந்த ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளன. ஆந்திர மாநிலத்தில், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள 14 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரமும், வரிக் குறைப்பினால் பயன் பெறுகிறது. மீன்பிடி வலைகள், உபகரணங்கள், படகு எஞ்சின், மற்றும்,</u>

பம்புகள் மீது, முன்பு 18 அல்லது 12 சதவிகிதமாக இருந்த ஜிஎஸ்டி, தற்போது 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. வரிக் குறைப்பு காரணமாக, பால் பொருட்களின் விலை 5 முதல், 7 சதவிகிதம் குறைவதால், ஆந்திர மாநிலத்தில 22 லட்சம் விவசாயிகளுக்கு வாழ்வாதாரமாகத் திகழும் பால்வளத் துறையும் ஊக்கம் பெற்றுள்ளது. ஆந்திர மாநிலத்தின் புகழ்பெற்ற பாரம்பரிய பொருட்களான கொண்டபள்ளி பொம்மை, தோல் பாவை, மற்றும், அரக்கு காப்பி மீதான வரியும் 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், கைவினைக் கலைஞர்களின் வருமானம் வலுப் பெறவும், இத்தகைய பொருட்களுக்கு, வெளிநாடுகளில் சந்தை வாய்ப்புகள் கிடைக்கவும் ஏதுவாகி உள்ளது. இது அல்லாது, புதுப்பிக்கவல்ல எரிசக்தி துறைகளும், ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் பயன்பெறுவதால், வேலை வாய்ப்பு அதிகரித்து, பொருளாதாரம் வலுவடையும் என்பதில் ஐயமில்லை.

----------------------------

*ரங்கசாமி* (8)

புதுச்சேரி நெட்டப்பாக்கம் தொகுதியில், மொத்தம் 16 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், மற்றும் நலத்திட்ட பணிகளை முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார். தீபாவளி பண்டிகைக்கான மளிகை பொருள் தொகுப்பு விரைவில் வழங்கப்படும் என்றும், இலவச அரிசி இன்னும் ஒருவார காலத்தில் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். தட்டாஞ்சாவடி தொகுதிக்குட்பட்ட சுப்பையா நகரில், 1

கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பில் புதைவட மின்சார கேபிள் அமைக்கும் பணிகளையும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

---------------------------

இருமல் மருந்து (9)

மத்திய பிரதேசத்தில், 21 குழந்தைகள் உயிரிழக்க காரணமான இருமல் மருந்தை தயாரித்த காஞ்சிபுரம் மருந்து உற்பத்தி நிறுவனத்தின் உரிமையாளரை, இன்று சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்து, மத்திய பிரதேஷ் சிறப்பு புலனாய்வுக் குழுவினரும், தமிழ்நாடு போலீசாரும் இணைந்து கைது செய்துள்ளனர். அவர் மீது, BNS மற்றும், இதர சட்டங்களின் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மருந்து உற்பத்தி நிறுவனத்திற்கு சீல் வைக்கப் பட்டுள்ளது. கோடம்பாக்கத்தில், இந்நிறுவனத்தின் பதிவு அலுவலகம் பூட்டப் பட்டுள்ளது.

---------------------------

வானிலை (11)

வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் காரணமாக, இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம்

உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 15ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நீலகரி மாவட்டம் கீழ் கோத்தகிரி எஸ்டேட்டில் 13 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

----------------------------

*மகளிர் கிரிக்கெட்* (5)

உலக கோப்பைக்கான ஐசிசி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்று விசாகப்பட்டினத்தில் நடைபெறும் போட்டியில், டாஸ் ஜெயித்த தென்ஆப்ரிக்க அணியால் முதலில் ஆட பணிக்கப்பட்ட இந்திய அணி, சற்று முன் வரை, -------- ஓவர்களில், ------------ விக்கெட் இழப்பிற்கு, ------- ரன் எடுத்து இருந்தது.

----------------------------

*நட்டா* (10)

இந்தியாவின் மருத்துவச் சூழல், நோய் சிகிச்சை என்பதற்கு அப்பாற்பட்டு, நோய் தடுப்பு, மற்றும், உடல்நல மேம்பாட்டை மையம் கொண்டதாக மாற்றப் பட்டுள்ளதாக, மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி நட்டா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், FICCI-Heal சுகாதார மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டில் தற்போது 1 லட்சத்து 70 ஆயிரம் ஆயுஷ்மான் ஆரோக்கிய கேந்திரங்கள் செயல்பட்டு வருவதால், மருத்துவ

வசதிகளை மக்கள் எளிதில் அனுக முடிவதாக கூறினார். 1998ஆம் ஆண்டில் இருந்து, பலகாலம் காத்திருந்த பின்னர், 2017ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய சுகாதார கொள்கை, அனைத்துத் தரப்பினரின் ஆலோசனைகளை அடிப்படையாக கொண்டது என்றும், அமைச்சர் குறிப்பிட்டார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

டிஜிட்டல் புரட்சியினால், **தொழில்நுட்ப ரீதியில் அனைவரையும் உள்ளடக்கிய சமூகமாக** இந்தியா மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், இன்று புதுடெல்லியில், **புகையிலை இல்லா இளைஞர்கள்** இயக்கத்தின் 3ஆம் கட்டப் பணிகளை தொடக்கி வைத்தார்.

**புகையில்லா இளைஞர்கள்** இயக்கத்தின் கீழ், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

இந்தியாவின் **தொழில் முனைவுச் சூழலில்**, ஆண்-பெண் சமத்துவம் பெரிய அளவில் மேம்பட்டுள்ளதாக, மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.